O.S.78/2020 நாள் 19.09.2025

வா.சா.1 பெருமாள்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>–

வாதி நிறுவனம் ஒரு கூட்டு பங்கு நிறுவனம் என்றால் சரிதான். வா.சா.ஆ.1ன் படி வாதி நிறுவனத்தில் மொத்தம் 11 பேர் பங்குதாரர்கள் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு செய்யது அப்துல் ஹரீம் என்ற பங்குதாரர் தான் வழக்கறிஞருக்கு விவரம் சொன்னார். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களுக்கு அவர் தான் தகவல் சொன்னாரா என்றால் முதலில் அவர் சொன்னார். மற்றவை நான் சொன்னேன். எனக்கு கொடுத்துள்ள அதிகார ஆவணத்தில் செய்யது அப்துல் ஹரீம் மட்டும் தான் கையெழுத்து செய்துள்ளார். நான் வாதி நிறுவனத்தில் விற்பனை பிரதிநிதியாக 11 வருடங்களாக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சம்பந்தப்பட்ட விவரங்கள் அனைத்தும் எனக்கு நேரடியாகத் தெரியாது என்றும், செய்யது அப்துல் ஹரீம்க்கு தான் தெரியும் என்றால் சரியல்ல. பிரதிவாதியாக காட்டப்பட்டுள்ள குட்டி பீடி என்பது தனிநபர் நிறுவனம் என்றால் சரிதான். ஆரம்பத்தில் அதன் உரிமையாளர் என்று கன்னியம்மாள் என்பவரை காட்டி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தவறுதலாக தாக்கல் செய்யப்பட்டது. பின்னிட்டு கன்னியம்மாள் பெயருக்கு பதிலாக ஜெயசந்திரபாண்டியன் என்று சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். குட்டி பீடியின் உரிமையாளர் ஜெயசந்திரபாண்டியன் என்று காட்டுவதற்குரிய ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். அது என்ன ஆவணம் என்றால் பதிவு சான்று எடுத்து

தாக்கல் செய்துள்ளோம். பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையை நான் படித்து பார்த்துள்ளேன். ஜெயசந்திர பாண்டியனுக்கு ஜெயந்தி பீடி கம்பெனி என்ற தனிநபர் நிறுவனத்தின் உரிமையாளர் என்று கட்சி செய்கின்ற விவரம் எனக்குத் தெரியும் என்றால் தெரியும். தற்போதுகூட குட்டி பீடி நிறுவனத்தின் உரிமையாளர் ஜெயசந்திர பாண்டியன் தானா என்று தெரிந்து கொள்ளவில்லை என்றால் அவர் தான் உரிமையாளர் என்று விசாரித்து தெரிந்து கொண்டேன். எதிர்வழக்குரையில் மேற்படி ஜெயசந்திரபாண்டியன் குறிப்பிட்டுள்ள ஜி.எஸ்.டி.ஐ. எண்ணைப் பொறுத்து விசாரித்தோம். மேற்படி ஜி.எஸ்.டி.ஐ. எண் ஜெயசந்திரபாண்டியன் பெயரில் தான் உள்ளது என்றால் ஞாபகம் இல்லை. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் குட்டி பீடியின் ஜி.எஸ்.டி.ஐ. எண் பற்றி குறிப்பிடப்படவில்லை. வா.சா.ஆ.7, 8, 9 ஆகிய ஆவணங்களில் எதுவும் ஜெயசந்திரபாண்டியன் பெயர் வரவில்லை. மேற்படி ஆவணங்கள் ஜெயந்தி பீடி நிறுவனத்திற்கு சம்பந்தப்பட்டது கிடையாது என்றால் சரிதான். பெயரைப் பொறுத்து deceptive similiarity உள்ளது என்பது எனது கட்சி கிடையாது. 2018 ம் ஆண்டிற்கு முன்பும் பின்பும் உள்ள எங்கள் நிறுவனத்தின் Sales report எங்கள் நிறுவனம் வசம் உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததற்கு தனிப்பட்ட காரணம் எதுவும் இல்லை. எங்களுடைய பீடி தரம் குறைந்து மதிப்பிழந்து விட்டது சம்பந்தமாக தனிநபர் புகார் எதுவும் எங்கள் நிறுவனத்திற்கு வரவில்லை. வியாபாரத்தில் எங்கள் நிறுவனத்திற்கு நஷ்டம் ஏற்பட்டது என்பதைக் காட்டக்கூடிய ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை.

எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களில் குட்டி பீடி நிறுவனத்தின் உரிமையாளர் ஜெயசந்திரபாண்டியன் தான் என்று காட்டுவதற்குரிய ஆவணங்கள் எது என்றால் சாட்சி ஆவணங்கள் அனைத்தையும் பார்த்துவிட்டு அதில் எதுவுமில்லை என்று கூறுகிறார். இந்த வழக்கில் சாட்சியம் கூறுவதற்கு செய்யது அப்துல் ஹரீம் என்பவர் தான் தகுதியான நபர் என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு விவரங்கள் நேரடியாகத் தெரியும் என்று சொல்வது உண்மையில்லை என்றால் சரியல்ல. பிராதில் காட்டப்பட்டுள்ள குட்டி பீடி நிறுவனத்திற்கும், ஜெயசந்திரபாண்டியன் என்பவருக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. ஜெயசந்திரபாண்டியன் மீது வழக்கை தாக்கல் செய்ய எந்த வழக்கு மூலமும் வாதிக்கு ஏற்படவில்லை என்றால் சரியல்ல. தொழில் போட்டி காரணமாக சிறிய அளவில் பீடி வியாபாரம் செய்து வரும் ஜெயசந்திரபாண்டியன் தொழிலை நசுக்க வேண்டும் என்ற காரணத்திற்காக இந்த வழக்கில் அவரை கட்சியாக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்குரையில் சொல்லியவாறு பதிப்புரிமை மீறலோ, அல்லது வணிகக் குறியீடு உரிமை மீறலோ மேற்படி ஜெயசந்திரபாண்டியன் என்பவர் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதி நிறுவனத்தின் விற்பனையிலோ, வியாபார லாபத்திலோ எந்த காலத்திலும் எந்த குறையும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கு பரிகாரங்கள் எதுவும் ஜெயசந்திரபாண்டியனுக்கு எதிராக கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. அதனால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.